*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 227/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.அருண்குமார் த/பெ. ராஜேந்திரன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.08.2026.**

துவக்க நேரம் 03.55 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**1 முதல் 3 எதிரிகள் (1-பெரியண்ணன், 2-ரமேஷ், 3-வெள்ளையம்மாள்) ஆஜர். 4, 5ம் எதிரிகள் (4-அங்கமுத்து, 5-ஆசைக்கண்ணு) ஆஜரில்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4, 5ம் எதிரிகள் தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஊனத்துாரில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 19.08.2021 அன்று எனது தாத்தா இறந்துவிட்டார். இறந்த எனது தாத்தாவின் உடலை மறுநாள் 20.08.2021 அன்று காலை 11.30 மணியளவில் எங்களது காட்டின் தென்புறம் அடக்கம் செய்துகொண்டிருந்தபொழுது, 1 முதல் 5 எதிரிகள் சேர்ந்துகொண்டு ஏன் எங்க காட்டில் அடக்கம் செய்கிறீர்கள் என்று சண்டைக்கு வந்தார்கள்.

2) எதிரி ரமேஷ், போலிசிற்கு போன் செய்தார், ஆனால் போலிஸ் வருவதற்கு முன்பாகவே எனது தாத்தாவின் உடலை புதைத்துவிட்டோம். எதிரிகள் ஐந்துபேரும் சேர்ந்து, எங்களை பார்த்து கெட்ட வார்த்தையால்

திட்டிக்கொண்டிருந்தபொழுதே போலிசார் அங்கு வந்ததால் அவர்கள் திட்டுவதை நிறுத்திக்கொண்டார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1, 2 ஆகியோர்கள், எனது அம்மா, அப்பா என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பாக எதிரிகளுடன், நாங்கள் பழக்கமாக ஒன்றாகத்தான் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். எனது அக்காவை, எதிரி ரமேஷ் காதலித்து திருமணம் செய்துகொண்ட பின்புதான் எங்களுக்கும், எதிரிகளுக்கும் விரோதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான்.

2) எனது தாத்தா உயிருடன் இருந்தபொழுது, எனது தாத்தா, எனது அம்மா, அப்பா ஆகியோர்கள், எதிரிகளுடன் ஒன்று சேர்ந்துகொண்டுதான், கனகரத்தினம் என்பவர் மீது வழக்கு கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். எனது அக்காவின் திருமணத்திற்கு பின்னிட்டுதான், நாங்கள், கனகரத்தினத்துடன் ஒன்றுசேர்ந்துகொண்டோம் என்று சொன்னால் சரிதான்.

3) எனது அக்கா காதலித்து திருமணம் செய்துகொள்வதற்கு முன்பு, எனது தாத்தா அவரது சொத்தில் ஒரு ஏக்கரை, எதிரிகளின் பெயருக்கு ஒரு பதிவு செய்யப்படாத கிரயபத்திரம் மூலம் எழுதிவைத்துவிட்டாரா என்றால் அப்பொழுது நான் சிறிய பையனாக இருந்ததால், எனக்கு அது பற்றி தெரியவில்லை.

4) எதிரிகளுக்கு என் தாத்தா, அவருக்கு சொந்தமான நிலத்தை எழுதிவைத்துவிட்டதால், அவர்களின் நிலத்தில் என் தாத்தாவின் பிரேதத்தை புதைக்கக்கூடாது என்று கேட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரிகள், எங்களை திட்டவில்லை என்றாலும், கனகரத்தினத்தின் தூண்டுதலின் பேரில்

எதிரிகளுக்கெதிராக எனது அம்மாவின் மூலமாக பொய் வழக்கு கொடுத்து, அந்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

முடிவு நேரம் 04.06 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.12 19:07:02 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 227/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.சக்திவேல் த/பெ. வெள்ளையன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.08.2026.**

துவக்க நேரம் 04.07 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**1 முதல் 3 எதிரிகள் (1-பெரியண்ணன், 2-ரமேஷ், 3-வெள்ளையம்மாள்) ஆஜர். 4, 5ம் எதிரிகள் (4-அங்கமுத்து, 5-ஆசைக்கண்ணு) ஆஜரில்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4, 5ம் எதிரிகள் தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சின்னசேலத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.08.2021 அன்று மதியம் 03.30 மணிக்கு எனது மாமா இறந்துவிட்டார். இறந்த எனது மாமாவின் உடலை மறுநாள் 20.08.2021 அன்று காலை 11.00 மணியளவில் இறந்த எனது மாமாவினுடைய காட்டின் தென்புறம் அடக்கம் செய்துவிட்டோம்.

2) எனது மாமாவை அடக்கம் செய்த இடம், எதிரிகளின் இடம் என்று சொல்லி எதிரிகள், எங்களிடம் தகராறு செய்தார்கள். அது சம்மந்தமாக எனது அத்தை புகார் கொடுத்தார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன பிச்சண்ணனை புதைத்த இடம் எதிரிகளின் இடமா, எனது அத்தையின் இடமா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் பிச்சண்ணனின் இடம்தான், எதிரிகள், அந்த இடம் அவர்களின் இடம் என்று சொல்லி தகராறு செய்தார்கள்.

முடிவு நேரம் 04.14 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.12 19:07:09 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 227/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-8)***

*Name / Father's Name:* ***திரு.லட்சுமணன் த/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.08.2026.**

துவக்க நேரம் 04.15 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**1 முதல் 3 எதிரிகள் (1-பெரியண்ணன், 2-ரமேஷ், 3-வெள்ளையம்மாள்) ஆஜர். 4, 5ம் எதிரிகள் (4-அங்கமுத்து, 5-ஆசைக்கண்ணு) ஆஜரில்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4, 5ம் எதிரிகள் தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஊனத்தூரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.08.2021 அன்று எனது தாத்தா பிச்சன் என்பவர் தவறிவிட்டார். இறந்த எனது தாத்தா பிச்சனின் உடலை அடக்கம் செய்யவேண்டி, மறுநாள் பிச்சனின் காட்டிற்கு சென்று, அவரது உடலை புதைப்பதற்காக குழிவெட்டிக்கொண்டிருந்தோம்.

2) அப்பொழுது நாங்கள் குழி வெட்டிக்கொண்டிருந்த நிலம் எதிரிகளுடையது என்று சொல்லி எதிரிகள் அனைவரும் அங்கு வந்து, எங்களை தகாத கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். நாங்கள் எதுவும் பேசாமல் குழி வெட்டிக்கொண்டிருந்தோம். அதன் பிறகு எதிரிகள், போலிசிற்கு போன்

செய்தார்கள். போலிசார் வருதற்குள், நாங்கள் இறந்த நபரின் உடலை புதைத்துவிட்டோம். பின்பு போலிசார் அங்கு வந்து, என்னிடம் நடந்த சம்பவத்தை குறித்து எழுதி, என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள், எங்களை கெட்ட வார்த்தையால் பேசவில்லை என்றாலும், இறந்துபோன நபர் மற்றும் அ.சா.1, 2 ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) நான், எழுதப்படாத வெள்ளைத்தாளில் போலிசாரிடம் கையெழுத்து செய்துவிட்டு நான் சம்பவயிடத்தில் கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.20 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.12 19:07:16 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 227/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-6 (LW-9)***

*Name / Father's Name:* ***திரு.மாணிக்கம் த/பெ. சடையன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.08.2026.**

துவக்க நேரம் 04.21 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**1 முதல் 3 எதிரிகள் (1-பெரியண்ணன், 2-ரமேஷ், 3-வெள்ளையம்மாள்) ஆஜர். 4, 5ம் எதிரிகள் (4-அங்கமுத்து, 5-ஆசைக்கண்ணு) ஆஜரில்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4, 5ம் எதிரிகள் தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சின்னசேலத்தில் உள்ள தாழ்பாச்சேரியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.08.2021 அன்று மாலை 04.00-04.30 மணியளவில் எனது மாமன் பிச்சன் என்பவர் இறந்துவிட்டார். இறந்த எனது மாமா பிச்சனின் உடலை அடக்கம் செய்யவேண்டி, மறுநாள் எனது மாமன் பிச்சனுக்கு சொந்தமான காட்டிற்கு சென்று, அவரது உடலை புதைப்பதற்காக குழிவெட்டிக்கொண்டிருந்தோம்.

2) அப்பொழுது நாங்கள் குழி வெட்டிக்கொண்டிருந்த நிலம் எதிரிகளுடையது என்று சொல்லி எதிரிகள் அனைவரும் அங்கு வந்து, எங்களை தகாத கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். நாங்கள் எதுவும் பேசாமல்

குழி வெட்டிக்கொண்டிருந்தோம். அதன் பிறகு எதிரிகள், போலிசிற்கு போன் செய்தார்கள். போலிசார் வருதற்குள், நாங்கள் இறந்த நபரின் உடலை புதைத்துவிட்டோம். பின்பு போலிசார் அங்கு வந்து, என்னிடம் நடந்த சம்பவத்தை குறித்து எழுதி, என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள், எங்களை கெட்ட வார்த்தையால் பேசவில்லை என்றாலும், இறந்துபோன நபர் மற்றும் அ.சா.1, 2 ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன பிச்சண்ணனை புதைத்த இடம், இறந்துபோன பிச்சண்ணனுக்கு சொந்தமான இடம் இல்லை என்றாலும், அந்த இடம் எதிரிகளுக்கு சொந்தமான இடம் என்று சொன்னாலும் சரியல்ல.

2) நான், எழுதப்படாத வெள்ளைத்தாளில் போலிசாரிடம் கையெழுத்து செய்துவிட்டு நான் சம்பவயிடத்தில் கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.12 19:07:21 +0530

Judicial Magistrate No.2, Attur.